ஸ்தானங்கள் காலியானதால், மூன்று ஸ்தானங்கள் இதுவரையில் நிரப்பப்படவில்லை என்ற குறை இருக்கிறதே, அதுகுறித்து அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அதுகுறித்து விவரம் என்னிடம் இல்லை. தனிக் கேள்வி கேட்டால் அதன் நிலைமைகளை ஆராய்ந்து பதில் சொல்லலாம். எங்கே காலி இடங்கள் இருக்கின்றனவோ அங்கே தகுதி வாய்ந்தவர்களை நியமிக்க வேண்டும். வேலை தேடித் தரும் அலுவலகங்களில் அதற்குரிய பெயர்களை நாம் கேட்கிறோம். முதல் நிலை அரபு மொழி ஆசிரியர்கள் வேண்டும் என்று கேட்டோம். தகுதியுடையவர்கள் இல்லாததினால் இரண்டாம் நிலை ஆசிரியர்கள் அக்டோபர் மாதத்தில் கிடைத்தார்கள். அவர்களை நியமித்தோம். மாண்புமிகு உறுப்பினர் கேட்ட பள்ளியைப்பற்றித் தனியாகக் கேள்வி கேட்டால் அதுகுறித்து விவரங்கள் அளிக்கலாம்.

Committee on Siddha system of medicine

* 54 *Q.*—THIRU S. SANGUMUTHU THEVAR : Will the Hon. the Minister for Health be pleased to state—

(*a*) whether any panel has been set up in this State to collect materials for the Siddha system; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) ஆம். தமிழ்நாட்டில் சித்த மருத்துவம்பற்றிய கிடைப்பதற்கரிய கையெழுத்துப் பிரதிகளையும் ஓலைச் சுவடிகளையும், அச்சுப் பிரதிகளையும் சேகரிப்பதற்கென, அரசு ஒரு குழுவை ஜூலை 1972-ல் அமைத்துள்ளது.

(இ) இக் குழு கீழ்க்கண்ட அங்கத்தினர்களைக் கொண்டுள்ளது :—

(1) டாக்டர் சி. எஸ். உத்தமராயன்—தலைவர்.

(2) டாக்டர் பி. எம். வேணுகோபால், தனி அலுவலர், சித்த மருத்துவப் பாடப் புத்தகக் குழு—உறுப்பினர்—செயலாளர்.

(3) டாக்டர் எ. ஆனந்தகுமார்—உறுப்பினர்.

(4) டாக்டர் எம். சண்முகவேலு—உறுப்பினர்.

[1973 ஆகஸ்ட் 7

திரு. கோவை செழியன் : தமிழ் நாட்டில் மருந்து ஆராய்ச்சி நிலையம் சரியான முறையில் விஞ்ஞானத் துறை, ரிசர்ச் போல் பணியாற்றவில்லை என்ற ஒரு குறை இருந்து வருகிறது. தஞ்சை சரஸ்வதி மஹாலிலிருந்துதான் சர்பகந்தி பூவிலிருந்து (Sar Pasil) என்ற மருந்தை ஜெர்மனியர் கண்டுபிடித்தார்கள். இது உலகம் பூராவுக்கும் பயன்படுகிறது. அதே மாதிரி பிக்காணிப் பூவிலிருந்து Vinkarosia, Vin Blastine and Vin Cristine என்ற மருந்துகளை ரத்த கான்ஸருக்கு Lekaremia அமெரிக்கர் கண்டு பிடித்தனர். தமிழ் நாட்டிலிருந்து கற்றுக்கொண்டு அவர்கள் கொள்ளை லாபம் அடித்துக்கொண்டு போகிறார்கள். ஜெனரல் ஆஸ்பத்திரியில் அதற்கெல்லாம் டாக்டர் இராமச்சந்திரன் அவர்களின் தலைமையில் ஒரு ரிசர்ச் ஸ்டேஷன் இயங்கி வருகிறது. அவர்களைக் கேட்டால் பணம் இல்லை என்று சொல்கிறார்கள். நிறைய பணத்தைக் கொடுத்து வேறு சித்த வைத்தியர்களையும் மற்ற வைத்தியர்களையும் அமர்த்தி அதற்கு வேண்டிய ஏற்பாடு செய்தால் அது ஒரு நல்ல ரிசர்ச் சென்டர் ஆகும். இதை அரசு செய்ய முன்வருமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : அங்கத்தினர் ஆர்வத்தை அமைச்சர் என்ற முறையில் நான் பாராட்டுகிறேன். இப்படி ஆர்வம் உள்ள அங்கத்தினர்கள் தாங்கள் வைத்தியம் செய்து கொள்ளும்பொழுது சித்த வைத்திய முறைப்படி வைத்தியம் செய்துகொள்ள முன்வந்தால், சித்த வைத்திய மருத்துவர்களுடைய மதிப்பும் அதிகம் உயரும். ஆகவே, இப்படிப்பட்ட அங்கத்தினர்கள் சித்த வைத்திய முறையின்படி சிகிச்சை செற்றுக் கொள்வது அந்த வைத்திய முறைக்கு அளிக்கும் மதிப்பாகும். ஆராய்ச்சி பல்வேறு நிலையில் பல்வேறு கட்டத்தில் வெவ்வேறு அமைப்புகளில் நடைபெற்று வருகிறது. அவற்றையெல்லாம் தொகுத்து, தேவைப்படும்பொழுது அவைக்குத் தெரிவிக்கப்படும்.

பள்ளபட்டி அரசு மருத்துவ மனை.

*55. வினா—திரு. வா. மை. **அப்துல் ஜப்பார் :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பள்ளபட்டி அரசு மருத்துவ மனையில் தற்போதுள்ள படுக்கை வசதிகள் எத்தனை ?

(இ) இதை அதிகப்படுத்த அரசிடம் செயற்குறிப்பு ஏதேனும் உண்டா ?